

நாடாளுமன்றக் கூட்டத்தில் தமிழக எம்.பி.க்களை அநாகரிகமாக பேசிய ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து கோவை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக மாவட்டம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது கோவை கிணத்துக்கடவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார் மேலும் ஆர்ப்பாட்டத்தில் பேரூர் கழக செயலாளர்கள் கனகராஜ், ஆனந்தகுமார், பேரூராட்சி தலைவர் கதிர்வேல், பொதுக்குழு உறுப்பினர் நடராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கிணத்துக்கடவு பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய கல்வி நிதியைத் தரமறுக்கும்

# ஒன்றிய கல்வித்துறை அமைச்சருக்கு கண்டனம்!

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் தீர்மானம்!

புதுக்கோட்டை, மார்ச் 12-

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட தலைவர் ஜெயராஜ் தலைமையில் புதுக்கோட்டையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஜோதிமணி கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று கூட்டத்தின் செயல்பாடுகள் பற்றி விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா.சண்முகநாதன் கலந்து கொண்டு பல்வேறு இயக்க வளர்ச்சி மற்றும் ஆசிரியர் நலன் சார்ந்த தீர்மானங்களை விளக்கி பேசினார்.

கூட்டத்தில் மும்மொழிக் கொள்கை மற்றும் பி.எம்.ஸ்ரீ பள்ளிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தி கல்வி பங்கு நிதியை தமிழ்நாடு அரசுக்கு வழங்க மாட்டோம் என்றும் தமிழ்நாடு எம்.பி.க்கள் நாகரிக மற்றவர்கள் என்று ஆணவமாக பேசிய ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடிக்க வேண்டும். மாவட்ட அமைப்பின் கட்டிடத்தை கட்டுவதற்கான முயற்சியினை மேற்கொள்வது என்பன போன்ற பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் ரவிச்சந்திரன் ,மாநில செயற்குழு உறுப்பினர் அழகப்பன் ,ஒன்றிய செயலாளர்கள் மணியன், நல்ல முகமது, செல்வராஜ் யோகராஜா, சித்தார்த்தன், மதிய ழகன், சின்ன ராஜா, சந்திரசேகர், ராஜ்குமார், செந்தில், பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்டப் பொருளாளர் மலர்மன்னன் நன்றி கூறினார்.

# புகழ்பெற்ற முத்துப்பேட்டை தர்ஹாவில் இப்தார் நிகழ்ச்சி!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - பாக்கர் அலி சாஹிப் பங்கேற்பு!

திருவாரூர், மார்ச் 12-

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் அமைந்துள்ள உலக புகழ் பெற்ற ஹஜரத் ஷேக் தாவூத் காமில் ஒலியுல்லாஹ் தர்ஹாவில் திருவாரூர் மாவட்ட சிறுபான்மைப் பிரிவு அணியின் சார்பில் இப்தார் எனும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தர்ஹா தலைமை அறங்காவலர் ஹாஜி பாக்கர் அலி சாஹிப், மாவட்ட சிறுபான்மைப் பிரிவு அணி அமைப்பாளர் எம்.ஐ.தாஜுதீன் மற்றும் இஸ்லாமிய பெருமக்கள் பங்கேற்றனர்.

முத்துப்பேட்டை தர்ஹா எதிரே அமைக்கப்பட்ட பிரமாண்ட பந்தலில் நடைபெற்ற இந்த நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் குன்னலூர் அன்பழகன், கந்தசாமி, மீனாட்சி சூர்ய பிரகாஷ், ராஜ். என்கிற கருணாநிதி, செபேஷ் ரோலி, சிக்கந்தர், க.பா.ஜானகிராமன், மற்றும் ஜெ.நவாஸ்கான், ஜம்பை கல்யாணம், சேதுமுருகானந்தம், எஸ்.பி.பாஸ்கர், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் நவீன், ராக்கோ உதய சூரியன், சப்வான், வசந்தன் புலிகேசி, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டையும் தமிழ்மக்களையும் விமர்சித்த ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்தும், தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசை கண்டித்தும் பொதுமக்களிடம் துண்டு பிரசுரம் வினியோக்கும் நிகழ்வும், தர்மேந்திர பிரதான் உருவ பொம்மை எரிக்கும் நிகழ்ச்சியும் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் முத்துப்பேட்டை பிரதான கடை வீதியில் நடைபெற்றது.



முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பாக, நகர கழக செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன் தலைமையிலும் கோட்டூர் ஒன்றிய கழக செயலாளர் பால.ஞானவேல் முன்னிலையிலும் தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டு, பின்னர் ஆதரவற்ற இல்லத்தில் காலை உணவு வழங்குதல், அரசு போக்குவரத்துக் கழகம் தொ.மு.ச. சார்பாக கொடியேற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

## 4 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை!

சென்னை, மார்ச் 12-

பூமத்திய ரேகையை ஒட்டிய வடகிழக்கு இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

மார்ச் 12ல் கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதேபோன்று புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களுக்கும் ஆரஞ்சு அலர்ட் விடுக்கப் பட்டுள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை முன்னறிவிப்பு!**

சென்னையை பொருத்தவரை வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது அதிகபட்ச வெப்பநிலை 33 34° செல்சியஸை ஒட்டியும், குறைந்த பட்ச வெப்பநிலை 23 24° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நன்னிலம் நடராசன்**
**மார்ச் 12 (2002)**



நன்னிலம் கிளைக் கழகத்தைக் கட்டிக்காக்க செயலாளர் பொறுப்பினை ஏற்று இருபது ஆண்டுகள் நன்னிலம் வட்டத்தில் கழகம் ஆல்போல் வளர்த்தவர். கழகக் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக பணியாற்றியவர்.

தி.மு.கழகம் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல போராட்டங்களில் பங்கேற்றவர். நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இளமைப்பருவம் முதல் இறுதிநாள் வரை கழகத்தின் கொள்கை முழக்கம் செய்தவர். தன்னுடைய நகைச்சுவை பேச்சால் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்குமுள்ள கழகத் தோழர்களின் அன்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகச் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# விஷத்தைக் கக்கும் தர்மேந்திர பிரதான்!

வெறுப்பை உமிழ்வதும் பொய்யைக் கட்டவிழ்த்து விடுவதும் ஒன்றிய பாஜக அரசுக்குக் கைவந்த கலை.

மும்மொழி கொள்கையை அமல்படுத்தாததால் தமிழ்நாடு அரசுக்கு மாணவர்கள் மீது அக்கறை இல்லையாம். பிஎம்ஸ்ரீ திட்டத்துக்கு ஆதரவளிக்க தமிழ்நாடு முன்வந்ததாம்.

இப்படி அப்பட்டமான பொய்யை அவிழ்த்துவிட்டிருக்கிறார் பிரதான்.

வட இந்தியாவில் இந்தி மட்டும் கற்றவர்கள் சாதித்தது என்னவென்று அவரால் பட்டியலிட முடியுமா?

மாணவர்கள் மீது அக்கறை இல்லாத அரசு எது? என்று இந்திய மக்கள் நன்கு அறிவார்கள்.

முழு பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கப் பார்க்கிறார் ஒன்றிய அமைச்சர் பிரதான்.

பிஎம்ஸ்ரீ திட்டத்தில் சேருவது குறித்து ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு குழு அமைத்தது.

அந்தத் திட்டத்தில் தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிக்க முயல்வதாக அந்தக் குழு சுட்டிக்காட்டியது.

இது குறித்து ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கடிதமும் எழுதியது.

"தமிழ்நாடு அரசின் கொள்கைக்கு எதிரான தேசியக் கொள்கைக்கு ஆதரவு தர மாட்டோம் என்றும் கையெ முத்துப் போட முடியாது" என்றும் அந்தக் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டது.

இதையெல்லாம் மறைத்துவிட்டு புழுகிக் கொண்டிருக்கிறார் பிரதான்.

மாணவர்கள் மீது அக்கறை இருப்பது போல் பேசும் தர்மேந்திர பிரதானுக்கு சில கேள்விகள்...

- புதிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்து ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு அனுப்பிய கடிதத்தை வெளியிடத் தயாரா?
- மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தி இந்தி பேசும் மாநிலங்களுக்கு இரண்டாவது, மூன்றாவது மொழியாக எந்த மொழியைக் கற்பிக்கப் போகிறீர்கள்?
- இருமொழிக் கொள்கையால் வெற்றியடைந்த தமிழ்நாட்டுக்கு மூன்றாவது மொழி எதற்கு?
- இந்தி பேசும் மாநிலங்களில் இதுவரை இருமொழிக் கொள்கையைக் கூட அமல்படுத்தாது ஏன்?
- இந்தி பேசும் மாநிலங்களின் கல்வித் தரத்தையும் தமிழ்நாட்டின் கல்வித் தரத்தையும் ஒப்பிடத் தயாரா?

இந்தி பேசும் மாநிலங்களில் இருமொழிக் கொள்கையே இல்லாதபோது, தமிழ்நாடு மட்டும் மும்மொழிக் கொள்கையை எதற்கு?

மும்மொழிக் கொள்கை மூலம் இந்தி திணிப்புக்கான சதியை எளிதாக அரங்கேற்றத் துடிக்கிறீர்கள்.

அந்த சதியை முறியடித்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இன்றைக்குத் தென்மாநிலங்களிலும் இந்தி எதிர்ப்பு பரவ அடித்தளமிட்டவரும் அவரே.



**சைதை சாதிக்**
தலைமைக் கழகப் பேச்சாளர்

தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை

ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வியை மறுப்பது தேசியக் கல்வி கொள்கை - 2020

தமிழ்நாட்டின் மீதான பண்பாட்டுப் படையெடுப்பைப் புறங்காண்போம்!

மதவாதிகளின் கைகளில் சிக்கும் கல்வித் துறை

உயர் கல்வியை உருக்குலைக்கும் தேசியக் கல்விக் கொள்கை - 2019

புதிய கல்விக் கொள்கை – 21ஆம் நூற்றாண்டுக்கான மநுநீதி

ஒன்றிய ஆட்சியின் ஆணவம்

தமிழ்நாட்டின் கல்வி உரிமையைப் பாதுகாத்திட மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்

தற்சார்பு மிக்க கல்விக் கொள்கையே தமிழ்நாட்டிற்குத் தேவை

தேசிய கல்விக் கொள்கை வரைவுக்கு அன்றே விதை போட்ட ராஜாஜி!

இந்திய ஒன்றிய அரசே! புதிய கல்விக் கொள்கை 2020 இல் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளி

செயப்பிரகாசு நாராயணன் பிரிவு: கட்டுரைகள் வெளியிடப்பட்டது: 05 ஆகஸ்ட் 2020

ஜுலை 29 அன்று ஒன்றிய அமைச்சரவை புதியகல்விக் கொள்கை 2020க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கல்விக் குழு அனைத்து மாநில அரசுகளை கலந்து அவர்களின் ஆலோசனை, பரிந்துரை, பிரதிநிதிகளோடு உருவாக்கப்படவில்லை. அக்கல்விக் குழுவில் தமிழ்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்த யாரும் இல்லை.

2019ல் தேசிய கல்விக் கொள்கை வரைவு வெளியிடப்பட்ட பிறகு நாட்டின் பல்வேறு முனைகளிலிருந்து அரசியல் கட்சியினர், செயல்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், மாணவர் அமைப்பினர், ஆசிரியர் அமைப்பினர் எனப் பல்வேறு தரப்பினர் அந்த வரைவு அறிக்கையை மறுத்து பல்வேறு மாற்றங்களை முன் வைத்தனர். கிட்டத்தட்ட 2.25 லட்சம் கருத்துகள் வந்துள்ளன.

அப்படிவந்த கருத்துகளில் எந்தக் கருத்தையும் விவாதிக்காமல் படித்து முறையாகப் பரிசீலித்து தீர்வுக் காணவில்லை. மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தில் தேசிய கல்விக் கொள்கை 2020 முன் வைத்து விவாதம் நடத்தி ஒரு சட்ட வடிவம் கொடுப்பதற்குப் பதிலாக பாராளுமன்றத்தை மீறி, கொரோனா தொற்றால் மக்கள் முடக்கப்பட்டு இருக்கும் நிலையில் அமைச்சரவையே கல்விக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது தவறான உள்நோக்கம் கொண்ட ஒரு ஜனநாயகப் படுகொலை.

தவறான சனநாயக விரோத நடைமுறையில் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கை 2020 சாரம் என்பது ஒரு பார்ப்பனிய மேலாதிக்க இந்திய சமூகத்தை, செயற்கையான பாரதியர்களை உருவாக்குவது, கல்வியைக் கடைச் சரக்காக மாற்றுவது, கல்வி மீது மாநில அரசுகளுக்கு உள்ள அதிகாரங்களை, வளங்களை பறிப்பது, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள், பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களைக் கல்வி, வேலை, அதிகாரங்களில் இருந்து வெளியேற்றிப் பார்ப்பனிய ராமராஜ்யத்திற்கான அடிமைகளை உருவாக்குவது என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

தேசியக் கல்விக் கொள்கை 2020 தனக்கு முந்தைய பல்வேறு கல்விக் கொள்கைகளை, கல்விக் குழுக்கள் வழங்கிய அறிக்கைகளை புறந்தள்ளி அதன் வளர்ச்சிகளை எல்லாம் கீழே போட்டு மிதித்துக் காவிகளின் முன்னோர்களான பிரிட்டிஷ் மெக்காலே கல்விக் கொள்கையின் சாரத்தைப் போன்றே தற்போதைய கல்விக் கொள்கையின் சாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மெக்காலே கூறியது போல் "ரத்தமும் சதையுமாகத் தான் அவர்கள் இந்நாட்டு மக்களாக இருக்க வேண்டும் சிந்தனையால் அவர்கள் ஆங்கிலேயர்கள் ஆக இருக்க வேண்டும்" என்பதை அடியொற்றி பாரதிய சிந்தனையை தன் சிந்தனையாக கொண்ட மக்களைச் செயற்கையாக உருவாக்கவும் கல்வியை வணிகமயமாக்கவும், பாகுபாட்டை நோக்கமாக கொண்ட தரப்படுத்தலுமே இதன் நோக்கம். இது நன்கு திட்டமிடப்பட்ட இனப் படுகொலைக்கான நிகழ்ச்சி நிரல். இது கல்விக் கொள்கை அல்ல இனப் படுகொலைக்கான கல்வி.

தமிழ்நாட்டு கல்வி வளர்ச்சிக்கும் இக்கல்விக் கொள்கை 2020க்கும் ஏதாவது தொடர்பு உண்டா? தமிழ்நாட்டில் 58,033 அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் உள்ளன. இதில் அரசு உதவி பெறும் அரசு பள்ளிகள் மட்டும் 49,630 பள்ளிகள் உள்ளது. தமிழ் நாட்டில் உள்ள 92,286 குடியிருப்புகளில் 89,995 குடியிருப்புகளுக்கு அருகில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டு தொடக்கக் கல்வியில் ஆண் பெண் மாணவர் சேர்க்கை விகிதம் ஆண் 51.90%, பெண் 48.10 % என்பவையாக உள்ளது.

தொடக்கக் கல்வியில் 99.85% இடை நிலைக் கல்வியில் 95% உயர்க் கல்வியில் 48.5% என்பதைத் தமிழ்நாடு பல ஆண்டுகளுக்கு முன்பே அடைந்து விட்டது. ஆனால் தமிழ்நாடு அடைந்த இந்த வளர்ச்சியை எட்ட 2035 ம் ஆண்டு வரை இலக்கு நிர்ணயித்துள்ளது கல்விக் கொள்கை 2020. கல்வியைக் கணிப்பொறி, இணைய வழி வளர்க்க வேண்டும் என்கிறது கல்விக் கொள்கை 2020. ஆனால் தமிழ்நாட்டில் 11, 12, கல்லூரி மாணவர்களுக்கு பல ஆண்டுகளாக இலவசக் கணிப்பொறி வழங்கப்பட்டு வருகிறது. அத்தோடு செறிவூட்டப்பட்ட இ-பாடப் புத்தகங்கள் ஒலி, ஒளிக்காட்சிகளோடு வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உண்டு உறைவிடப் பள்ளிகள் உள்ளன. பெண் குழந்தைகளுக்கான உண்டு உறைவிடப் பள்ளிகள் உள்ளன. அதேபோல் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான வசதிகளும் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

மாணவர்களுக்கு சத்துள்ள மதிய உணவு, விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடை, காலணி, புத்தகப்பை, வண்ணப் பென்சில்கள், கணிதஉபகரணப்பெட்டி, புவியியல்வரைபடப்புத்தகம், கம்பளிச்சட்டை, மழைக்காலஆடை, உறைபனிக் காலுறைகள், பேருந்து பயண அட்டை மற்றும் மிதிவண்டிகள், மாணவர் விடுதிகள், உதவித் தொகை, குழு காப்பீடு போன்ற பல நலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

13 அரசு பல்கலைக் கழகங்கள், 300க்கும் மேற்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகள், 45 அரசு மருத்துவக் கல்லூரிகள் 12 அரசுப் பொறியியல் கல்லூரிகள் நூற்றுக்கணக்கான தொழில் நுட்பக் கல்லூரிகள், 13 அரசு சட்டக்கல்லூரிகள், 29 தனியார் பல்கலைக்கழகம் 1000 மேற்பட்டத் தனியார்க் கல்லூரிகள் உள்ளன.

கல்விக்கான ஒதுக்கீடு என்பதை தற்போதுள்ள 3.7% என்பதில் இருந்து 6% என்பதை இலக்காக நிர்ணயிக்கிறது இக்கல்விக் கொள்கை. ஆனால் தமிழ்நாடு அரசு 2019-2020ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்வித்துறைக்கு 35000 ஆயிரம் கோடிக்கு மேல் ஒதுக்கியுள்ளது. இது தமிழ்நாட்டுவரவு செலவில் முக்கியமான பங்கு. இவ்வாறுக் கல்வியில் முன்னோடியாகத் திகழ்கிறது தமிழ்நாடு. தமிழ்நாட்டின் கல்விச்சிக்கல்கள் வேறு. அதை இக்கல்விக் கொள்கை தீர்க்காது. அதிகப்படுத்தவே செய்யும்.

கல்விக்கொள்கை 2020 தன்னுடைய மூலங்களை வேதங்களிலும் புராணங்களிலும் சமஸ்கிருதத்திலும், பார்ப்பன முதலாளிகளிடம் தேடும் பொழுது தமிழ்நாடு தன்னுடைய கல்விக்கான மூலத்தைத் தமிழ்மரபுகளிலும், ஐக்கிய நாடுகள் சபைத் தன்னுடைய நோக்கமாக அறிவித்துள்ள வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோளை அடைய யாவரையும் உள்ளடக்கிய சமவாய்ப்புள்ள சமத்துவமான தரமானக் கல்வியை உறுதிப்படுத்துதல் என்பதைத் தமிழ்நாடு அரசு தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டு கல்வியை நடைமுறைப்படுத்தி வருகிறது.

உண்மையில் தேசிய கல்விக் கொள்கை 2020ஐ 2035ல் அடைய வேண்டியதாகக் குறிப்பிடப் பட்டுள்ள இலக்குகள் பெரும்பாலனவற்றைத் தமிழ்நாடு ஏற்கனவே அடைந்து அதற்கு மேலான இலக்குகளை நோக்கிப் பயணித்து வருகிறது. தமிழ்நாடு அரசு 2019 முன் சாதித்ததை 2035க்குள் சாதிக்கக் கனவு காணும் மோடி அரசின் கல்விக் கொள்கை 2020 எப்படி தமிழ்நாட்டுக் கல்வியை வழி நடத்த முடியும்?

தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தினால் 3,5,8 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வுகள், மும் மொழிக்கல்வி, பள்ளிக் கல்வியிலேயே தொழிற்பயிற்சி, தொடர் மாணவர் திறன் மதிப்பீடு, உயர்க் கல்விக்கான நுழைவுத் தேர்வு, கல்லூரிகளின் தன்னாட்சி, பல்கலைக்கழக இணைப்பு நீக்கம், ஆண்டுதோறும் பல்முனை நுழைவு மற்றும் வெளியேறுதல், ஆண்டுதோறும் சான்றிதழ், தேசியப் பாடத்திட்டக் கட்டமைப்பு, புதிய தேசிய மதீப்பீட்டுமையம், கல்வியில் காவிச் செயல்பாட்டாளர்களை நேரடியாக அனுமதித்தல், காவிமயமான பாடத் திட்டங்கள், சமஸ்கிருதத் திணிப்பு போன்றவற்றால் தமிழ்நாடு கல்வியில் வீழ்ச்சி அடையும், தமிழ்நாட்டு கல்வி நிறுவனங்கள் பன்னாட்டு பார்ப்பன சக்திகளால் கைப்பற்றப்படும்.

இதையெல்லாம் தடுத்ததால் தான் –
அவர் சூப்பர் முதலமைச்சர் தான்.